**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.96/2021**

**Deposition of PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. மகாலட்சுமி | **Age** | : | 58/2026 |
| **Husband's Name** | : | திரு. ராஜேந்திரன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | போடிநாயக்கனூர் | **Calling** | : | வீட்டுகுடித்தனம் |
| **Taluk** | : | போடிநாயக்கனூர் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03/07/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி மனு எண் 1458/2026ன் கீழ் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

2) நான் தற்போது போடி ரங்கநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஏற்கனவே திருமலாபுரம் பஜார் தெருவில் குடியிருந்து வந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். திருமலாபுரத்தில் எப்போது வரக்கூடிய இருந்து வந்தேன் என்றால் 5, 6 வருடங்கள் இருக்கும் ஞாபகம் இல்லை. நான் படிக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கான விபரம் நான்தான் வழக்கறிஞருக்கு சொன்னேன்.

3) இந்த வழக்கு தாக்கல் செய்தபோது நான் ரங்கநாதபுரத்தில்தான் குடியிருந்தேன் என்றால் சரிதான். நான் திருமலாபுரத்தில் குடியிருப்பதாக வழக்கு ஆவணங்களில் சொல்லியிருந்தால் அது தவறு. எனது கணவர் இறந்து 5, 6 வருடங்கள் ஆகிறது. மூர்த்தி கண்ணன் என்ன வியாபாரம் செய்து வந்தார் என்றால் ஜவுளி வியாபாரம், செல்போன் வியாபாரம், வளையல் வியாபாரம் ஆகியவை செய்து வந்தார்.

4) எதிரி மேற்படி தொழில்களை எங்கு செய்து வந்தார் போடி நகர் காவல் நிலையத்திற்கு எதிரேதான் செய்து வந்தார். அந்த கடைக்கு யார் ஓனர் என்றால் மூர்த்தி கண்ணன் அவரது மனைவி மதன் ஆகியோர் இருந்தனர். அன்னை சுடிதார் கடைக்கும் மூர்த்தி கண்ணன் என்பவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கடை மதன்குமார் என்பவருக்கு சொந்தமானது என்றால் மேற்படி மதன்குமார் மூர்த்தி கண்ணன் என்பவரது சித்தப்பா மகன்தான்.

5) அன்னை சுடிதார் கடையின் உரிமையாளர் மதன்குமார்தான் என்றால் சரியல்ல. எனது மகன் பெயர் அருண்குமார். எனது மகன் மூர்த்தி கண்ணன் என்பவர் கடையில் வேலை செய்தார் என்றால் சரிதான் கொஞ்சநாள் வேலை செய்தார் முடியவில்லை அதன்பிறகு வந்துவிட்டார். மூர்த்திகண்ணன் என்பவரது கடையில் எனது மகன் அருண்குமார் மேனேஜராக வேலை பார்த்தார் என்றால் கொஞ்சநாள் வேலை பார்த்தார் அதன்பிறகு வந்து விட்டார்.

6) அந்த காசோலை எந்த கடைக்கு சொந்தமான காசோலை என்றால் அன்னை சுடிதார் கடையில் வைத்து கொடுத்தார் கரூர் வைசியா வங்கி காசோலை ஆகும். அந்த காசோலை எந்த கடைக்கு சொந்தமான காசோலை என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிரி இந்த காசோலையை அன்னை சுடிதார் கடையில் வைத்து கொடுக்கவில்லை என்றும் மூர்த்திகண்ணன் என்பவருக்கு அன்னை சுடிதார் கடையில் எந்த வேலையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) இந்த காசோலை கிளாசிக் எண்டர்பிரைசஸ் என்ற செல்போன் கடையின் காசோலை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எதிரி போடி ரங்கநாதபுரத்தில் உள்ள எனது வீட்டில் வைத்து கடன் வாங்கிச் சென்றார் தொழில் செய்வதற்காக கடன் வாங்கிச் சென்றார். எந்த தேதியில் கடன் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் பணம் கொடுத்தபோது யாரும்

உடன் இருந்தார்களா என்றால் இல்லை. நான் மூர்த்திகண்ணனுக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் அதனால்தான் பணம் கொடுத்த தேதி ஞாபகம் இல்லை என்றும் பணம் கொடுத்து இருந்தால் அருகில் யாரையாவது வைத்து கொடுத்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8) மூன்று காசோலைகளும் ஒரே நாளில் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் உண்மையாக பணம் வாங்கி இருந்தால் மொத்த தொகைக்கு ஒரே காசாலை கொடுத்திருப்பார் என்றும் மூன்று காசோலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மூர்த்திகண்ணன் ஊரில் கடன்பட்டு ஊரை விட்டு ஓடி போய் ஆறு வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சரிதான். அதனால் எதிரி 13.1.2021 ஆம் தேதி பணம் வாங்கிக் கொண்டு என்னிடம் காசோலையை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9) மூர்த்திகண்ணன் என்பவரது செல்போன் கடையில் எனது மகன் மேலாளராக வேலை பார்த்தார் என்றும் அந்த கடையில் இருந்த காசோலையை திருடி என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் சொன்னது போலவும் நிரூபண வாக்குமூலத்தில் சொன்னது போலவும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள விபரங்கள் அருண்குமார் எழுதியதா என்றால் இல்லை மூர்த்தி கண்ணன் எழுதிக் கொடுத்தது.

10) காசோலையில் உள்ள கையொப்பங்கள் எதிரியின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல மூன்று காசோலைகளையும் நாங்களே பூர்த்தி செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை வீட்டில்தான் இருக்கிறேன். எனக்கு எந்த வருமானமும் இல்லை என்றும் அதனால் எதிரிக்கு கடன் கொடுக்கும்

அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல ஒரு இடம் வாங்குவதற்காக வைத்திருந்தோம் அந்த பணத்தைதான் கொடுத்தேன்.

11) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணம் வங்கியில் இருந்து எடுத்து வந்தேன் என்றால் இல்லை வீட்டில் வைத்திருந்தேன். எனக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றும் எதிரிக்கு கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் யார் என்றே தெரியாது என்றும் எதிரிக்கு அவர் பழக்கம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி எந்த தேதியில் என்னை சந்தித்து பணம் கேட்டார் என்ற விபரத்தை வழக்கு ஆவணங்களில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

12) நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றும் அந்த சமயத்தில் அவர் கடன்பட்டு ஊரைவிட்டு சென்றுவிட்டார் என்றும் என்னிடம் கடன் வாங்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ–12ல் உள்ள முகவரியில் மூர்த்திகண்ணன் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13) எதிரி 2020 ஆம் வருடம் வரை சில்லமரத்துப்பட்டியில் குடியிருந்து வந்தார் என்றும் நான் ம.சா.ஆ–12–ல் குறிப்பிட்டுள்ள முகவரியில் அவர் குடியிருந்து வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்லியுள்ள புகாரில் உள்ள இந்த வழக்கின் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.03 17:21:01 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**